# இன்று பொதுக்காலம் இருபத்தோராம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - C

# 2022-08-21

*(இன்றைய வாசகங்கள்:*

*இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம்* 66: 18-21,

*திருப்பாடல்கள்* 117;1 2,

*எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்திலிருந்து வாசகம்* 12: 5-7,11-13,

*லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 13: 22-30)

*திருப்பலி முன்னுரை*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று பொதுக்காலம் இருபத்தோராம் ஞாயிறு. 'வாழ்க்கையில் முன்னேற மின்தூக்கி எதுவும் கிடையாது. ஒவ்வோர் அடியாகத்தான் எடுத்து வைத்து முன்னேறவேண்டும்.' அதுபோன்று நாம் மீட்புப் பெற அகன்ற பாதையில் சென்றுகொண்டிருக்கக்கூடாது. மாறாக, இடுக்கமான குறுகலான வழியில்தான் செல்லவேண்டும். ஆகையால், நாம் இறைவனுக்குகந்த இடுக்கமான வழியில் நுழைவோம். அதன்வழியாக இறைவன் தரும் மீட்பைக் கொடையாகப் பெறுவோம். ஆகவே நாம் அனைவரும் ஆண்டவர் காட்டும் நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றி, நாமே அனைவருக்கும் நற்செய்தியாக மாறி இறைவனைப் புகழ்ந்தேற்றும் வரம் கேட்டுச் செபிப்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*எங்கள் தலைவரே இறைவா,*

*எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும், உமக்கு உண்மையுள்ள பணியாளர்களாய் வாழவும், திருச்சபையின் மக்கள் உமது திருவுளப்படி வழிநடத்தவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்புத் தந்தையே எம் இறைவா!*

*உக்ரைன் ரஷ்யா போர் விரைவில் முடிவு பெறவும்; அமைதியான சூழல் ஏற்படவும், போரின் பாதிப்புக்கள் விரைவில் சீரடையவும், வன்முறைகள் முற்றுப்பெறவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*ஞானத்தின் உறைவிடமான எம் இறைவா!*

*போரினால் பலவித இழப்புக்களைச் சந்திக்கின்ற மக்களை ஒப்புக்கொடுக்கின்றோம். அன்பான மனிதர்களை, உடல் உறுப்புக்களை, உடமைகளை, நிம்மதியை, மன மகிழ்ச்சியை, வேலைகளை இன்னும் பலவற்றை இழந்து தவிப்போருக்கு ஆறுதலாகவும்; ஆதரவாகவும் நீரே இருக்க வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*நல் ஆயனே! எம் இறைவா!*

*கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றபோது சண்டைகளை விடுத்து அமைதிப் பேச்சு வார்த்தைகளில் தீர்வு காணவும், மக்களின் அமைதியான வாழ்வையும், நலனையும் குறித்து அக்கறை கொள்ளவும், எங்கள் தலைவர்களை வழி நடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*ஒற்றுமையின் வேந்தனே இறைவா, உம்மைப் போற்றுகிறோம்.*

*ஒரே ஆயனும், ஒரே மந்தையுமாக நாங்கள் அனைவரும் வாழும் வரம் தாரும். எங்களிடையே சாதி, மதம், மொழி, நாட்டின் பெயரால் அமைந்துள்ள வேலிகளை, தடைகளைத தகர்த்தெறிந்து, அனைவரும் உமது பிள்ளைகள் என்னும் உம் கனவை நனவாக்கும் பணியில் எங்களை ஈடுபடுத்த எங்களை ஆசிர்வதித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*நம்பிக்கை தருபவரே இறைவா,*

*உலகில் போர் பதற்றம், வன்முறை, வேலையின்மை போன்ற பல்வேறு பிரச்சனை களால் நம்பிக்கை இழந்து தவிக்கும் இளையோர், உம் திருமகன் இயேசு வழியாக நம் பிக்கை நிறைந்த எதிர்காலத்தைக் காண உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*இறைவா!*

*மீண்டும் உலகை வாட்டிவதைக்கும் இந்த தொற்று நோயிலிருந்து உலகமக்களை காப்பாற்றும். இழந்த வாழ்வை மீண்டும் பெற்று வளமையோடு புதுப்பொழிவோடும் உமது சாட்சிகளாக வலம் வரத் தேவையான அருளைப் பொழியுமாறு உயிர்த்த இயேசுவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*மீட்பு அளிப்பவரே இறைவா,*

*உலகப் பொருட்கள் மீதான ஆசையால் உறவுகள், உடல்நலம் மற்றும் மன அமைதியை இழந்து தவிக்கும் மக்கள் அனைவரும், விண்ணுலகு சார்ந்தவற்றில் மனதை செலுத்தி உமது மீட்பை அனுபவிக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*